**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16/2024**
**Prosecution Witness – PW.3**

| | |
|---|---|
| Name | :திரு. சுரேஷ் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.
(A1, A2, A7 are present. A3, A4, A6 are absent. Petition U/s.355 BNSS filed and allowed).

முதல் விசாரணை–

நான் மேக்கோட்டில் தாமசித்து வருகிறேன். நான் எனது தங்கையில் பலச்சரக்கு கடையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால், தெரியாது. ( ஆஜராகி இருப்பவர்கள் அகமது பயாஷ், அப்சல், முகமது அலி கூத்து). வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

நான் 21.05.2022 அன்று காலை 9.15 மணிக்கு என்னுடைய கடையில் வியாபாரம் செய்து கொண்டிருந்த போது திக்கணங்கோடு இரணியல் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனும், அவரது மனைவி ரேணுகாவும், வந்து கொண்டிருந்ததை பார்த்தேன். அவர்களுக்கு முன்னால், Splender Bike ல் வந்த இரண்டு நபர்கள் அவர்களை போக விடாமல் தடுத்து நிறுத்தி கெட்டவார்த்தைகள் பேசி நாங்கள் இஸ்லாமிய இயக்கத்தை சேர்ந்தவர்கள் எங்கள் அமைப்பிற்கு எதிராக வேலை செய்கிறாயா என்று கேட்டு அவர்களை தள்ளிவிட்டதை நான் பார்த்தேன். அதே திசையில் அவர்களுக்கு பின்னால் திரும்பவும் வந்த இரண்டு நபர்கள் இந்த இஸ்லாமிய இயக்கத்திற்கு எதிராக வேலை செய்த இவன் உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனை இரும்பு கம்பியாலும், வேறு ஆயுதங்களால்

தாக்கியதாகவும், அதை நான் பார்த்ததாகவும், எங்கள் ஊரை சேர்ந்த சுப்பையா பிள்ளை மகன் உதயகுமார், வேலாயுதன் பிள்ளை மகன் சங்கள் ஆறுமுகம் பிள்ளை மகன் மனோகரன், குமாரசாமி பிள்ளை மகன் கணபதி ஆகியோர் ஓடி வரவே இராதாகிருஷ்ணனை தாக்கியவர்கள் ஓடி விட்டார்கள் என்றும், இந்த சம்பவம் நடப்பதற்கான காரணம் என்ன என்பதையும் என்னை விசாரித்த இரணியல் காவல் ஆய்வாளரிடம் சொல்லி விட்டு தற்சமயம் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வயதில் குறைந்தவர்கள் என்பதால், அவர்கள் பெற்றோரின் வேண்டுகோளின் படி இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No.16/2024**
**Prosecution Witness – PW.4**

| | |
|---|---|
| Name | :திரு. உதயகுமார் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(A1, A2, A7 are present. A3, A4, A6 are absent. Petition U/s.355 BNSS filed and allowed).

முதல் விசாரணை–

நான் மேக்கோடு ஊரில் குடியிருந்து வருகிறேன். நான் பெயின்டிங் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால், தெரியவில்லை. வெகு நாட்களுக்கு முன்பு நடந்ததால், ஞாபகம் இல்லை. எங்கள் ஊரை சேர்ந்த வேலாயுதம் பிள்ளை மகன் சங்கர், ஆறுமுகம் பிள்ளை மகன் மனோகரனை எனக்கு தெரியும். 21.05.2022 ம் தேதி காலை நான் வேலைக்கு சென்று வரும் போது எதாவது சம்பவத்தை பார்த்தேனா என்றால், நடந்து பல நாட்கள் ஆகிவிட்டதால் ஞாபகம் இல்லை. சம்பவம் பற்றி எதாவது சொல்கிறேனா என்றால், தெரியவில்லை. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)

நான் 21.05.2022 அன்று காலை 9.15 மணிக்கு திக்கணங்கோடு இரணியல் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனும், அவரது மனைவி ரேணுகாவும், வந்து கொண்டிருந்ததை பார்த்தேன். அவர்களுக்கு முன்னால், Splender Bike ல் வந்த இரண்டு நபர்கள் அவர்களை போக விடாமல் தடுத்து நிறுத்தி கெட்டவார்த்தைகள் பேசி நாங்கள் இஸ்லாமிய இயக்கத்தை சேர்ந்தவர்கள் எங்கள் அமைப்பிற்கு எதிராக வேலை செய்கிறாயா என்று கேட்டு அவர்களை தள்ளிவிட்டதை நான் பார்த்தேன். அதே திசையில் அவர்களுக்கு பின்னால் திரும்பவும் வந்த இரண்டு நபர்கள் இந்த இஸ்லாமிய இயக்கத்திற்கு எதிராக

வேலை செய்த இவன் உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனை இரும்பு கம்பியாலும், வேறு ஆயுதங்களால் தாக்கியதாகவும், அதை நான் பார்த்ததாகவும், எங்கள் ஊரை சேர்ந்த சுப்பையா பிள்ளை மகன் உதயகுமார், வேலாயுதன் பிள்ளை மகன் சங்கள் ஆறுமுகம் பிள்ளை மகன் மனோகரன், குமாரசாமி பிள்ளை மகன் கணபதி ஆகியோர் ஓடி வரவே இராதாகிருஷ்ணனை தாக்கியவர்கள் ஓடி விட்டார்கள் என்றும், இந்த சம்பவம் நடப்பதற்கான காரணம் என்ன என்பதையும் என்னை விசாரித்த இரணியல் காவல் ஆய்வாளரிடம் சொல்லி விட்டு தற்சமயம் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வயதில் குறைந்தவர்கள் என்பதால், அவர்கள் பெற்றோரின் வேண்டுகோளின் படி இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16/2024**
**Prosecution Witness – PW.5**

| | |
|---|---|
| Name | : திரு. சங்கர் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.
(A1, A2, A7 are present. A3, A4, A6 are absent. Petition U/s.355 BNSS filed and allowed).
முதல் விசாரணை–

நான் மேக்கோட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு முன்னால் சாட்சி சொன்ன உதயகுமார் எனது உறவினர். நான் பெயின்டிங் மற்றும் Welding வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை நான் பார்க்கவில்லை. சம்பவம் நடந்ததாக நான் கேள்விப்பட்டேன். என்னை போலீஸ் அப்போது விசாரித்தார்கள். சம்பவம் என்பது இருச்சக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்களை அடித்து போட்டார்கள். எந்த வருடம் என்றால், 4 வருடங்கள் இருக்கும். போலீஸ் என்னை ஒருமுறை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அன்று நடந்த சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால், ஆமாம் நேரடியாக நான் பார்க்கவில்லை. இருச்சக்கர வாகனத்தில் வந்து அடித்தார்கள் என்பது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், நான் கேள்விப்பட்டு தான் சொல்கிறேன் என்றாலும், ஆமாம். போலீஸ் விசாரணையில் நான் நீதிமன்றத்தில் என்ன சொன்னேனோ

அதே தான் சொன்னேன் என்றால், ஆமாம். போலீஸ் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்களா என்றால், இல்லை. என் வீட்டு பக்கத்தில் வந்து விசாரித்தார்கள். என்னை போலீஸ் விசாரிக்கவில்லை என்றாலும், போலீஸ் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**<u>DEPOSITION OF WITNESS</u>**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16/2024**
**Prosecution Witness – PW.6**

| | |
|---|---|
| Name | : திரு. கணபதி |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(A1, A2, A7 are present. A3, A4, A6 are absent. Petition U/s.355 BNSS filed and allowed).

<u>முதல் விசாரணை</u>–

நான் மேக்கோட்டில் குடி வசித்து வருகிறேன். நான் தற்சமயம் எந்த வேலையும் செய்யவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியாது. போலீஸ் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை ( அரசு தரப்பில்)</u>

நான் 21.05.2022 அன்று காலை 9.15 மணிக்கு திக்கணங்கோடு இரணியல் ரோட்டில் மேற்கில் இருந்து கிழக்காக வந்த இருச்சக்கர வாகனத்தில் வந்த செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனும், அவரது மனைவி ரேணுகாவும், வந்து கொண்டிருந்ததை பார்த்தேன். அவர்களுக்கு முன்னால், Splender Bike ல் வந்த இரண்டு நபர்கள் அவர்களை போக விடாமல் தடுத்து நிறுத்தி கெட்டவார்த்தைகள் பேசி நாங்கள் இஸ்லாமிய இயக்கத்தை சேர்ந்தவர்கள் எங்கள் அமைப்பிற்கு எதிராக வேலை செய்கிறாயா என்று கேட்டு அவர்களை தள்ளிவிட்டதை நான் பார்த்தேன். அதே திசையில் அவர்களுக்கு பின்னால் திரும்பவும் வந்த இரண்டு நபர்கள் இந்த இஸ்லாமிய இயக்கத்திற்கு எதிராக வேலை செய்த இவன் உயிரோடு இருக்க கூடாது என்று சொல்லி செல்வராஜ் மகன் இராதாகிருஷ்ணனை இரும்பு கம்பியாலும், வேறு ஆயுதங்களால் தாக்கியதாகவும், அதை நான் பார்த்ததாகவும், எங்கள் ஊரை சேர்ந்த சுப்பையா பிள்ளை மகன் உதயகுமார், வேலாயுதன் பிள்ளை மகன் சங்கள் ஆறுமுகம் பிள்ளை மகன் மனோகரன், குமாரசாமி பிள்ளை மகன் கணபதி ஆகியோர் ஓடி வரவே இராதாகிருஷ்ணனை தாக்கியவர்கள் ஓடி விட்டார்கள் என்றும், இந்த

**சம்பவம் நடப்பதற்கான காரணம் என்ன என்பதையும் என்னை விசாரித்த இரணியல் காவல் ஆய்வாளரிடம் சொல்லி விட்டு தற்சமயம் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் வயதில் குறைந்தவர்கள் என்பதால், அவர்கள் பெற்றோரின் வேண்டுகோளின் படி இந்த நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், இல்லை.**

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**

**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 16/2024**
**Prosecution Witness – PW.7**

| | |
|---|---|
| Name | : திரு.அஜின் |
| Father's Name | : |
| Age | : |
| Calling | : |
| Village | : |
| Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 14.07.2026.

(A1, A2, A7 are present. A3, A4, A6 are absent. Petition U/s.355 BNSS filed and allowed).

முதல் விசாரணை–

நான் தேங்காப்பட்டணத்தில் குடி இருந்து வருகிறேன். மேகோடு என்கிற ஊர் தெரியும். நான் தற்சமயம் எலக்ட்ரானிக் கடை வைத்து தொழில் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியுமா என்றால், கடைசியாக நிற்கும் நபரை பார்த்திருக்கிறேன். அவர் பெயர் தெரியாது. (அவர் பெயர் நீதிமன்றத்தால் கேட்கப்பட்டு முகமது அலி கூத்து என்று கூறுகிறார்). சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. போலீஸ் என்னை அதற்கு முன்பு நடந்த சம்பவத்தை பற்றி விசாரித்தார்கள். நான் எந்த வழக்கிற்காக சாட்சியம் சொல்ல வந்தேன் என்ற விபரம் தெரியும். 19.05.2022 ல் இரவு 10.30 மணி இருக்கும். பண்டாரவிளை ஜங்சன் அருகே மழை பெய்து இருந்ததால் தண்ணீர் கிடந்தது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை. நான் கேள்விப்பட்டது எங்கள் பகுதியில் உள்ள ஒரு பையன் முகமது அலி மற்றும் அவருடைய நண்பரும் பைக்கில் வந்தார்கள். அப்போது எதிரே வந்த கார் தண்ணீர் மேல் வேகமாக சென்றதால், பைக்கில் வந்தவர்கள் மேல் தண்ணீர் அடித்திருக்கிறது. அதனால், அவர்கள் பைக்கை கொண்டு சென்று காருக்கு முன்பாக நிறுத்தி விட்டு காரில் இருந்வர்களை அடித்துள்ளார்கள். அப்போது ஊரில் இருந்தவர்கள் முகமது அலியையும், அவர்களது நண்பர்களையும் அடித்திருக்கிறார்கள். அது தொடர்பாக புகார் கொடுக்கப்பட்டது. அடித்தவர்களை தேடிக் கொண்டிருந்தார்கள். அதற்கு அடுத்த நாள் 20.05.2022 அன்று ரித்திஷ் என்பவரின் மச்சானை மேக்கோட்டில் வைத்து அடித்ததாக சொன்னார்கள். மீண்டும் சாட்சி அடுத்த நாள் இல்லை என்றும் 3 வது நாள் என்றும் கூறுகிறார். அடிபட்ட நபரை நாகர்கோயிலில் திலகராம் மருத்துவமனை என்று நினைக்கிறேன் அங்கு சேர்த்திருந்தார்கள். இது தொடர்பாக போலீஸ் என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் தொடர்பாக

தெரியுமா என்று கேட்டார்கள் தெரியாது என்று சொன்னேன். தேங்காப்பட்டணத்தில் நடந்த சம்பவத்தை பற்றி தான் கேட்டார்கள்.

எதிரிகள் 1 முதல் 4 வரை குறுக்கு விசாரணை

நான் இரணியல் காவல் நிலைய வழக்கு தொடர்பாக சாட்சியம் அளிக்க வந்தேன். 19.05.2022 தேதி ஒரு சம்பவம் நடந்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியிருக்கிற சம்பவம் புதுக்கடை காவல் நிலையம் எல்லைக்குள் நடைபெற்ற சம்பவம் என்றால், ஆமாம். 19.05.2022 நடந்த சம்பவம் தொடர்பாக நான் இரணியல் காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் கொடுக்கவில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை வேறு எங்கும் தெரியப்படுத்தவில்லை என்றால், ஆமாம்.

எதிரிகள் 6 மற்றும் 7 தரப்பில் குறுக்கு விசாரணை

இரணியல் காவல் நிலைய வழக்கு தொடர்பாக விசாரிக்காத நிலையில் எதற்காக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், போலீஸ் என்னை சாட்சியாக சேர்த்திருப்பதாக சாட்சியம் அளிக்க வருமாறு கேட்டதால் வந்தேன். நான் அடையாளம் காட்டிய எதிரியை இதற்கு முன்பு தெரியுமா என்றால், எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால், தெரியும். அடையாளம் காண்பித்த நபர் பெயர் எப்படி தெரியும் என்றால், நீதிமன்றத்தில் கேட்கும் போது தெரியும். நான் அடையாளம் காட்டிய நபரை ஊரில் வழக்கமாக பார்ப்பேன். 19.05.2022 நடந்த சம்பவத்தில் நான் வழக்கில் சாட்சியாக இருக்கிறேனா என்றால், தெரியாது இதுவரை என்னை கூப்பிடவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன விபரம் எல்லாம் கேள்விப்பட்டுதான் சொல்லியிருக்கிறேன் என்றாலும், நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், ஆமாம்.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**